# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க,
# கரையோரம் பேணற் சட்டம்

---

**(1981, செத்தெம்பர் மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)**

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, செத்தெம்பர் மாதம் 11 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 1.55 தபாற் செலவு : சதம் 75

# 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணற் சட்டம்

[1981, செத்தெம்பர் மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ.98/78
1241

**கரையோர வலயத்தை அளவை செய்வதற்கும் கரையோர வலய முகாமைச் செய்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும்; கரையோர வலயத்தினுள் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும்; கரையோர வலயத்தினுள் கரையோரம் பேணலுக்கான வேலைத்திட்டங்களை வகுத்தமைத்தற்கும் நிறைவேற்றுதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; குறித்த சில எழுத்திலான சட்டங்களுக்கு விளைவாந் தன்மையினவான திருத்தங்களைச் செய்வதற்கும்; அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணற் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்; அத்தேதி இதனகத்துப் பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

## பாகம் I

## நிருவாகம்

2. கரையோர வலயத்தின் நிருவாகம், கட்டுப்பாடு, கட்டுக்காவல், முகாமை என்பன இத்தால் குடியரசிற்கு உரித்தாக்கப்படுகின்றன.

**கரையோர வலயத்தின் நிருவாகம் குடியரசிற்கு உரித்தாக்கப்படும் என்பது.**

3. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக—

(அ) இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் கரையோரம் பேணற் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிப்பதிலும் செயற்படுத்துவதிலும் பணிப்பாளருக்கு உதவிபுரிவதற்கு அவசியமாகக் கூடியவாறான—

(i) அத்தகைய எண்ணிக்கையினரான பிரதிப் பணிப்பாளர்களும் உதவிப் பணிப்பாளர்களும்; அத்துடன்

(ii) அத்தகைய ஏனைய அலுவலர்களும்,

நியமிக்கப்படலாம்.

**கரையோரம் பேணற் பணிப்பாளரும் ஏனைய அலுவலர்களும்.**

4. பணிப்பாளரானவர்—

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும்;

**பணிப்பாளரின் கடமைகளும் பணிகளும்.**

(ஆ) கரையோர வலயத்தினுள் கரையோரம் பேணலுக்கான வேலைத் திட்டங்களை வகுத்தமைப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும்; அத்துடன்

(இ) கரையோரம் பேணலின் நோக்கத்திற்காக வேறு திணைக்களங்களுடனும் முகவாண்மைகளுடனும் நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து ஆராய்ச்சி நடாத்துவதற்கும்,

பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் III ஆம் பாகத்தின் கீழான தமது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் என்பவற்றுள் எவற்றையேனும் அரசாங்க அதிபருக்குக் கையளித்தல்.

5. எந்த நிருவாக மாவட்டத்தினுள் கரையோர வலயத்தின் ஏதேனும் ஒரு பகுதி அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர், பணிப்பாளரின் எழுத்திலான அதிகாரவளிப்பின் பேரிலும் பணிப்பாளரின் பொதுப் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமையவும், இச்சட்டத்தின் III ஆம் பாகத்தினால் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள், பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் அந்த நிருவாக மாவட்டத்தினுள் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.

கரையோரம் பேணல் ஆலோசனைப் பேரவை.

6. இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதுமான கரையோரம் பேணல் ஆலோசனைப் பேரவை ஒன்று தாபிக்கப்படல் வேண்டும் :—

(அ) கரையோரம் பேணல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள்; இவரே பேரவையின் தவிசாளராக இருத்தல் வேண்டும்;

(ஆ) உல்லாசப்பிரயாணம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடைய அமைச்சின் சிரேட்ட அலுவலரும் அத்தகைய அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான ஒருவர்;

(இ) கப்பற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடைய அமைச்சின் சிரேட்ட அலுவலரும் அத்தகைய அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான ஒருவர்;

(ஈ) உள்ளூராட்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடைய அமைச்சின் சிரேட்ட அலுவலரும் அத்தகைய அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான ஒருவர்;

(உ) உண்ணாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடைய அமைச்சின் சிரேட்ட அலுவலரும் அத்தகைய அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான ஒருவர்;

(ஊ) தொழிற்றுறை என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடைய அமைச்சின் சிரேட்ட அலுவலரும் அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான ஒருவர்;

(எ) பணிப்பாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள்; இவரே பேரவையின் செயலாளராகச் செயலாற்றுதல் வேண்டும்;

(ஏ) நீரியல் வளங்கள், ஆராய்ச்சி, அபிவிருத்தி என்பவற்றிற்குப் பொறுப்பாகவுள்ள குழுவின் பணிப்பாளர் அல்லது வேறு ஆள் ;

(ஐ) காணி ஆணையாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஒ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் என்ற பதவியை அப் போதைக்கு வகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஓ) நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக் கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ; அத்துடன்

(ஔ) அமைச்சரினால் நியமிக்கப்படும் வேறு மூன்று உறுப்பினர்கள் ; இவர்களுள் ஒருவர் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுள் ஏதேனும் ஒன்றின் கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினராக வும், ஒருவர் கரையோரச் சூழலுடன் சம்பந்தப்பட்ட வலிந்தாத வும் ஒழுங்கமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராகவும், அத்துடன் ஒருவர் கடற்றொழிலைப் பிரதிநிதித்துவப்படுத்துபவ ராகவும் இருத்தல் வேண்டும்.

இப்பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் இதனகத் துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

7. பேரவையின் பணிகள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் :— பேரவையின் பணிகள்.

(அ) கரையோர வலயத்தில் தொடங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட் டுள்ள எல்லா அபிவிருத்திச் செயற்பாடுகளும் பற்றி அமைச்ச ருக்கும் பணிப்பாளருக்கும் ஆலோசனை அளித்தலும் ;

(ஆ) இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தயா ரிக்கப்பட்ட கரையோர வலய முகாமைச் செய்திட்டத்தை மீளாய்தலும் அதன் மீதான விதப்புரைகள் எவையேனுமிருப் பின் அவற்றைப் பணிப்பாளருக்குக் கொடுத்துதவுதலும் ;

(இ) 14 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பங் கள் சம்பந்தமாகப் பணிப்பாளருக்குக் கொடுத்துதவப்பட்ட சூழல் தாக்குகை மதிப்பீடுகளை மீளாய்தலும், அவற்றின் மீதான கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றைப் பணிப்பாள ருக்குத் தெரிவித்தலும் ;

(ஈ) கரையோர வலயத்தினுள் செயற்றிட்டங்களுக்கான தேவை எழும் பொழுதெல்லாம் அத்தகைய தேவை பற்றிப் பணிப்பாளருக்கு அறிவித்தலும் ; அத்துடன்

(உ) விடயத்துக்கேற்றவாறு அமைச்சரால் அல்லது பணிப்பாளரால் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடியதும், கரையோரம் பேணல் பற்றியதுமான வேறேதேனும் கருமம் பற்றி விடயத்துக் கேற்றவாறு அமைச்சருக்கு அல்லது பணிப்பாளருக்கு ஆலோ சனை அளித்தலும்.

பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம்.

8. (1) பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் இறப்பதன்மூலம், பதவியிலிருந்து விலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னராகவே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) அமைச்சர், பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையேனும் பதவியிலிருந்து அகற்றுவது உகந்ததெனக் கருதினால், அதற்கான காரணமெதுவும் காட்டாமல், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அத்தகைய உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம் என்பதோடு, அத்தகைய அகற்றுகை எந்நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், தமது பதவியிலிருந்து விலகுவதைப் பற்றி அமைச்சருக்கு முகவரியிட்டு கடிதமொன்றை அனுப்புவதன்மூலம் எந்த நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(4) பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறந்தால் அல்லது பதவியிலிருந்து விலகினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால், அமைச்சர், 6 ஆம் பிரிவின் (ஔ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, இறக்கும், பதவியிலிருந்து விலகும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் உறுப்பினரின் இடத்தில் உறுப்பினராக இருப்பதற்கென வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இறப்பதன்மூலம், பதவியிலிருந்து விலகுவதன்மூலம் அல்லது அகற்றப்படுவதன்மூலம் தமது பதவியை முன்னராகவே வறிதாக்கினாலொழிய, தமக்கு முன்னர் பதவி வகித்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(6) பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், சுகவீனம் காரணமாக, பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலத்துக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சருக்கு எழுத்துமூலம் அவ்வாறு அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அமைச்சர், 6 ஆம் பிரிவின் (ஔ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றவென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(7) பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் அல்லாது வேறு வகையில் பதவியை வறிதாக்கும் பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

9. பேரவையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மட்டும் அல்லது பேரவை உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு இருக்கின்றமை காரணமாக மட்டும், பேரவையின் செயல் அல்லது நடவடிக்கை ஏதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படலாகாது.

ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக, அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு இருப்பதன் காரணமாக, பேரவையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது.

10. (1) பேரவைக் கூட்டம் ஒன்று, இரண்டு மாதங்களுக்கொருமுறையாவது நடாத்தப்படுதல் வேண்டும்.

பேரவைக் கூட்டங்கள்.

(2) தவிசாளர் அல்லது அவர் இல்லாதபொழுது பணிப்பாளர் அல்லது அவர்கள் இருவரும் இல்லாதபோது சமூகமளித்துள்ள உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், பேரவைக் கூட்டங்களுக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) பேரவைக் கூட்டம் எதனிலும் முடிவு காணப்படுவதற்கான பிரச்சினைகள் யாவும், சமூகமளித்துள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையோரின் வாக்கினால் முடிவுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாக இருக்கும் சந்தருப்பத்தில், தலைமைதாங்கும் உறுப்பினர், அறுதியிடும் வாக்கொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) பேரவையின் கூட்டம் எதற்குமான கூட்டநடப்பெண், ஏழு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவையானது அதன் சொந்த நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

## பாகம் II

### கரையோர வலய முகாமை

11. (1) நியமித்த தேதிக்குப் பின்னர் சாத்தியமாகக்கூடியவாறாக அத்தகைய விரைவில், பணிப்பாளர் கரையோர வலயத்தின் அளவை ஒன்றைச் செய்வித்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய அளவையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட அறிக்கையொன்றைத் தயாரித்தலும் வேண்டும். அந்த அறிக்கையில் பின்வருவனவும் உள்ளடக்கப்படுதல் வேண்டும் :—

கரையோர வலயத்தை அளவை செய்தல்.

(அ) கரையோர வலயத்தில் அமைந்துள்ள கட்டமைப்புக்கள், வீதிகள், அகழ்வுகள், துறைமுகங்கள், கழிகால்கள், குப்பைபோடுமிடங்கள், மற்றும் ஏனைய வேலைக்களங்கள் எல்லாவற்றையும் பற்றிய விபரப் பட்டியல் ஒன்று ;

(ஆ) கரையோர வலயத்துள் காணப்படும் எல்லா முருகைக் கற்பாறைகளும் பற்றிய விபரப் பட்டியல் ஒன்று ;

(இ) கரையோர வலயத்துள் அமைந்துள்ளவையும், வர்த்தக வகையில் பயன்படுத்தப்படற்பாலவையும், அவ்விடத்தில் இருக்கின்றன என எண்பிக்கப்பட்டவையும் சந்தேகிக்கப்பட்டவையுமான எல்லாக் கனிப்பொருட் படிவுகளும் பற்றிய விபரப் பட்டியல் ஒன்று ;

(ஈ) கரையோர வலயத்துள் பொழுதுபோக்கு நீராட்டத்துக்கு மிகப் பொருத்தமான இடப்பரப்புகள் உட்பட, சமய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது தன்னிகரற்ற இயற்கை வனப்புப் பெறுமதியுள்ள அல்லது பொழுதுபோக்கு நோக்கங்களுக்கான பெறுமதியுள்ள எல்லா இடப்பரப்புகளும் பற்றிய விபரப் பட்டியல் ஒன்று ;

(உ) கரையோர வலயத்துள் உள்ள எல்லாக் கழிமுக இடப்பரப்புகளும் அல்லது ஈரநிலங்களும் பற்றிய விபரப் பட்டியல் ஒன்று ; இது கடற்றொழிலிடம் என்றவகையில் அல்லது வனவிலங்கு வாழகம் என்றவகையில் அந்த இடம் எப்படி முக்கியத்துவம் பெறுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது ;

(ஊ) கடற்றொழிலிடம், கிளிஞ்சில் கடற்றொழிலிடம், கடலரிப்பு, கடலோரப் பரப்பின் தேய்வும் வளர்வும், மற்றும் இவற்றோடு உறவுபட்ட விடயங்கள் உட்பட, கரையோரத் தோற்றப்பாடு சம்பந்தமான ஆராய்ச்சிக்கு சிறப்புப் பெறுமதி வாய்ந்தவையும் கரையோர வலயத்தினுள் உள்ளவையுமான எல்லா இடப்பரப்புகளும் பற்றிய விபரப்பட்டியல் ஒன்று ;

(எ) எந்தக் கரையோர வலயத்திலிருந்து வர்த்தக அல்லது தொழிற்றுறை நோக்கங்களுக்காக முருகைக்கல், மணல், கடற்சிப்பி அல்லது வேறு பதார்த்தம் கிரமமாக எடுத்துச் செல்லப்படுகின்றதோ அந்தக் கரையோர வலயத்தினுள் உள்ள எல்லா இடப்பரப்புகளும் பற்றிய விபரப்பட்டியல் ஒன்று ;

(ஏ) கரையோர வலயத்தில் கடலரிப்பினது தாக்கம் பற்றிய மதிப்பீடொன்று ; இம்மதிப்பீட்டில், அக்கடலரிப்பினால் இழக்கப்பட்ட நிலத்தின் அளவும், அந்த இழப்பின் பொருளாதாரச் செலவு பற்றிய மதிப்பீடொன்றும், அத்துடன் அந்த இழப்புக்கு மனிதச் செயற்பாடு எந்த அளவுக்குக் காரணமாயிருந்தது என்பன பற்றிப் புவியியல் அமைவிடத்தின்மூலம் அளவினை அறுதியிட்டுக் காட்டும் குறிப்பொன்றும் அடங்கியிருத்தல் வேண்டும் ;

(ஐ) கரையோர வலயத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும் மணல், முருகைக்கல், கடற்சிப்பிகள், மற்றும் வேறு பதார்த்தங்கள் என்பனவற்றின் தொகைகள் பற்றிய மதிப்பீடொன்றும், அத்தகைய தொகைகள் எந்த அளவுக்கு ஏனைய மூலங்களிலிருந்து அல்லது ஏனைய பொருள்களிலிருந்து வழங்கப்படலாமோ அந்த அளவு பற்றிய மதிப்பீடு ஒன்றும், அத்துடன் அவ்வாறு செய்கின்றமையின் பொருளாதாரச் செயல்முறைச் சாத்தியக்கூறு பற்றிய பகுப்பாய்வு ஒன்றும் ; அத்துடன்

(ஓ) கரையோர வலயத்தில் இருந்து முருகைக்கல், மணல், கடற்சிப்பி, மற்றும் வேறு பதார்த்தங்கள் என்பனவற்றைக் கிரமமான அடிப்படையில் எடுத்துச்செல்வதில் அப்போதைக்கு ஈடுபட்டிருக்கும் எல்லா வேலையாட்களும் பற்றிய தொகைமதிப்பு ஒன்றும், அத்தகைய வேலையாட்களினது தங்கிவாழுநர்கள் பற்றிய தொகைமதிப்பு ஒன்றும், அத்துடன் அந்தச் செயற்பாடுகளிலிருந்து பெறப்படும் ஓர் ஆளுக்குரிய வருமானம் பற்றிய மதிப்பீடு ஒன்றும்; இவை, புவியியல் இடப்பரப்பு வகையிலும் செயற்பாட்டுவகையிலும் வகைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ், அறிக்கை தயாரிக்கையில், பணிப்பாளர், அரசாங்கத் திணைக்களங்களினாலும் நிறுவனங்களினாலும் வேறு முகவராண்மைகளினாலும் திரட்டப்பட்ட அல்லது தொகுக்கப்பட்ட இயைபான புள்ளிவிவரங்களையும் தகவல்களையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கையைத் தயாரிக்கும் நோக்கத்துக்கென பணிப்பாளரால் நியாயமான முறையில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எவையேனும் புள்ளிவிவரங்களை அல்லது தகவல்களைக் கொடுத்துதவுதல் அத்தகைய திணைக்களத்தினுடைய, நிறுவனத்தினுடைய அல்லது முகவராண்மையினுடைய தலைவர்களது கடமையாதலும் வேண்டும்.

12. (1) பணிப்பாளர், நியமித்த தேதிக்குப் பின்னர் மூன்று ஆண்டுகளுக்குப் பிந்தாமல், 11 ஆம் பிரிவைப் பின்பற்றிச் செய்யப்பட்ட அளவையினது பெறுபேறுகளின் அடிப்படையில் விரிவானதொரு கரையோர வலய முகாமைச் செய்திட்டமொன்றை (அது இதனகத்துப்பின்னர் "செய்திட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பேரவையிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அச்செய்திட்டம் பின்வருவனவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும் :— **கரையோர** வலய முகாமைச் செய்திட்டம்.

(அ) கரையோர வலயத்தில் குறிப்பிட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் பொருத்தம் பற்றித் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட வேண்டிய வழிகாட்டு நெறிகள்;

(ஆ) கரையோர வலயத்தினுள் பின்வரும் விடயங்கள் பற்றிக் கூறும் உத்தேசங்கள் :—

(i) காணிப் பாவனை;

(ii) போக்குவரத்து வசதிகள்;

(iii) இயற்கை வனப்புகளையும் ஏனைய இயற்கை மூலவளங்களையும் பேணிக்காத்தலும் முகாமை செய்தலும்;

(iv) பொழுதுபோக்கும் உல்லாசப் பிரயாணமும்;

(v) கழிவகற்று வசதிகள், துறைமுகங்கள், மின்வலுப்பொறித் தொகுதிகள் உட்பட, பகிரங்கக் கட்டுவேலைகளும் வசதிகளும்;

(vi) கனிப்பொருள் பிரித்தெடுத்தல்;

(vii) உயிரின வளங்கள்;

(viii) மானிடக் குடியிருப்புகள்;

(ix) கமத்தொழில்; அத்துடன்

(x) தொழிற்றுறை;

(இ) கரையோர வலயத்தில் காணியை அல்லது நீரைக் குறித்த சில பாவனைகளுக்கென ஒதுக்கிவைப்பதற்கான உத்தேசங்கள் அல்லது கரையோர வலயத்திலுள்ள குறித்த சில இடப்பரப்புகளில் குறித்தசில செயற்பாடுகளைத் தடைசெய்வதற்கான உத்தேசங்கள் ;

(ஈ) செவ்வையான கரையோர வலய ஒழுங்குபாட்டின் நேரடி விளைவாக வேலைவாய்ப்பிழந்த மனிதவலுவைப் பயன்படுத்துவதற்கான ஓர் அனைத்தடக்கமான நிகழ்ச்சித்திட்டம் ; அத்துடன்

(உ) அரசாங்கப் பூடகைகளையும் தத்துவங்களையும் பலப்படுத்துவதற்கும் கரையோரம் பேணலின் நோக்கத்துக்கென ஆராய்ச்சி நடாத்துவதற்குமான விதப்புரைகள்.

(2) செய்திட்டமானது பணிப்பாளரினால் பேரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள் அச்செய்திட்டத்திற்கு திரிபுகள் எவையேனுமிருப்பின் அவற்றைச் செய்து அச்செய்திட்டத்தின் மீதான விதப்புரைகளைப் பேரவை, பணிப்பாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் செய்திட்டம் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுவதன்மீது அவர் அதனைப் பொதுமக்களினால் பார்வையிடப்படுவதற்கு வைத்தல் வேண்டும். செய்திட்டம் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் எவரேனும் ஆள் அதன் மீதான எவையேனும் கருத்துரைகளை அமைச்சருக்கு எழுத்தில் சமர்ப்பிக்கலாம்.

(4) மூன்றும் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்ட அறுபது நாட்களைக் கொண்ட காலப்பகுதியின் முடிவில், அமைச்சரானவர் அவ்வுட்பிரிவின் கீழ் தமக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எவையேனும் கருத்துரைகளைக் கருத்திற் கொண்டு, அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய திரிபுகள் எவையேனுமிருப்பின் அவற்றிற்கமைய செய்திட்டத்தைத் தற்காலிகமாக அங்கீகரிக்கலாம் என்பதுடன், இறுதி அங்கீகாரத்துக்கெனச் செய்திட்டத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும். செய்திட்டம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுவதன்பேரில், அமைச்சர் அச்செய்திட்டத்தை கசெற்றில் வெளியிடுவித்தல் வேண்டும். செய்திட்டமானது அத்தகைய வெளியீட்டுத் தேதியில் அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) செய்திட்டம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து தொடங்குகின்ற நான்கு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியின்போதும் செய்திட்டத்தின் ஒவ்வொரு மீளாய்வுத் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளைக் கொண்ட காலத்திற்குள்ளும் செய்திட்டம் மீளாயப்படுதல் வேண்டும் என்பதுடன், (2), (3), (4) ஆகிய உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய மீளாய்வு ஒவ்வொன்றும் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(6) கரைமுனங்கு பொதுமக்களால் பயன்படுத்தப்படுவதை, அல்லது கரையோர வலயத்தினுள் ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தும் ஒழுங்குவிதிகள் உட்பட, செய்திட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றிற்கும் பயனளிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கு விதிகளை அமைச்சர் பேரவையின் விதப்புரைகளின் மீது ஆக்கலாம்.

(7) கரைமுனங்கு பொதுமக்களால் பயன்படுத்தப்படுவதை மட்டுப்படுத்திக் கட்டுப்படுத்துகின்ற அல்லது கரையோர வலயத்தினுள் ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டைத் தடைசெய்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஒழுங்குவிதிகள் உட்பட, செய்திட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றிற்கும் பயன் கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்.

13. அமைச்சர் கரையோர வலயத்தின் நீண்டகால உறுதிப்பாட்டையும் விளைவுப்பெருக்கத்தையும் சூழல் தரத்தையும் கருத்திற்கொண்டு, நியமித்த தேதிக்குப் பின்னரும் செய்திட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னரும் அதற்கெனப் பணிப்பாளருக்கு ஒரு விண்ணப்பம் செய்யப்படுவதன்பேரில் 14 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படவேண்டுமா என்பதனைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படவேண்டிய கட்டளைக்கல்லை விதித்துரைக்கலாம்.

அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான கட்டளைக்கல்லை அமைச்சர் விதித்துரைத்தல்.

## பாகம் III

### அனுமதிப்பத்திரத்துக்கான நடவடிக்கைமுறை

14. (1) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பணிப்பாளரால் அதற்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் அல்லாது, ஆளெவரும் கரையோர வலயத்தினுள் விதித்துரைக்கப்பட்ட ஓர் அபிவிருத்திச் செயற்பாட்டைத் தவிர வேறு ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடுதலாகாது.

அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல்.

(2) அமைச்சர், கரையோர வலயத்தின் உறுதிப்பாடு, விளைவுப்பெருக்கம், சூழல் தரம் என்பனமீது அந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் விளைவுகளைக் கருத்திற்கொண்டு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஓர் அனுமதிப்பத்திரமில்லாமல் கரையோர வலயத்தில் எந்த அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடக்கூடுமோ அந்த அபிவிருத்திச் செயற்பாட்டின் வகுதிகளை விதித்துரைக்கலாம்.

(3) கரையோர வலயத்தினுள் ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்குரிய அனுமதிப்பத்திரத்திற்கான ஒரு விண்ணப்பம் விதித்துரைக்கப்பட்ட முறையில் பணிப்பாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் விதித்துரைக்கப்பட்ட விவரங்களைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற் கான நிபந்தனை கள்.

15. உத்தேச அபிவிருத்திச் செயற்பாடு—

(அ) கரையோர வலய முகாமைச் செய்திட்டத்திற்கும் அத்தகைய செய்திட்டத்தைப் பயனுறுத்துவதற்கு ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கும் ஒத்திருந்தாலன்றியும், அல்லது அத்தகைய செய்திட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் விண்ணப்பம் பெறப்பட்டிருப்பின் 13 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட கட்டளைக்கல்லைத் திருப்திப்படுத்தினாலன்றியும்; அத்துடன்

(ஆ) கரையோர வலயத்தின் உறுதிப்பாடு, விளைவுப்பெருக்கம், சூழல் தரம் ஆகியவற்றின்மீது மற்றப்படிக்குப் பாதகமான விளைவை ஏற்படுத்தாதிருந்தாலன்றியும்,

இப்பாகத்தின்கீழ் பணிப்பாளரால் அனுமதிப்பத்திரம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

சூழல் தாக்குகை மதிப்பீடு.

16. (1) கரையோர வலயத்தினுள் ஓர் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்குரிய அனுமதிப்பத்திரத்துக்கான ஒரு விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில் பணிப்பாளர் அத்தகைய அபிவிருத்திச் செயற்பாடு பற்றிய சூழல் தாக்குகை மதிப்பீடொன்றைக் கொடுத்துதவுமாறு விண்ணப்பகாரரைத் தேவைப்படுத்தலாம் என்பதோடு, அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவது விண்ணப்பகாரரின் கடமையாதலும் வேண்டும். இப்பிரிவின்கீழ் கொடுத்துதவப்படும் சூழல் தாக்குகை மதிப்பீடு ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு விண்ணப்பகாரர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கிணங்கியொழுக அத்தகைய விண்ணப்பக்காரரால் பணிப்பாளருக்குக் கொடுத்துதவப்பட்ட சூழல் தாக்குகை மதிப்பீடொன்றைப் பெற்றதும்—

(அ) அத்தகைய மதிப்பீட்டின் பிரதியொன்றைப் பேரவையின் கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கெனப் பேரவையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய மதிப்பீடு பொதுமக்களால் பார்வையிடப்படுவதற்கென வைக்கப்படும் இடத்தையும் நேரங்களையும் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதன்மீதான கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றைத் தெரிவிக்கும்படி பொதுமக்களை அழைத்தலும் வேண்டும்.

(3) (அ) பேரவையானது, சூழல் தாக்குகை மதிப்பீடு ஒன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள் அதன்மீதான கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றைப் பணிப்பாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய மதிப்பீடு பற்றிய அறிவித்தலொன்று (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் பொதுமக்களுக்குள் எவரேனும், அதன்மீதான தமது கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றைப் பணிப்பாளருக்குத் தெரிவிக்கலாம்.

(4) கரையோர வலயத்தினுள் அபிவிருத்திச் செயற்பாடொன்றில் ஈடுபடுவதற்கு 14 ஆம் பிரிவின்கீழ் ஓர் ஆளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கலாமா என்பது பற்றி முடிவுசெய்யும்பொழுது, அத்தகைய செயற்பாடு தொடர்பாக, சூழல் தாக்குகை மதிப்பீடு பற்றி (3) ஆம் உட்பிரிவின்கீழ் தெரிவிக்கப்பட்ட கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றையும், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றென வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தொடங்கப்பட்ட எவையேனும் அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் பணிப்பாளர் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(5) பணிப்பாளர், (3) ஆம் உட்பிரிவின்கீழ் தெரிவிக்கப்பட்ட எவையேனும் கருத்துரைகளைப் பெற்றதிலிருந்து அறுபது நாட்களுக்குள் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட முடிவைச் செய்தல் வேண்டும்.

அனுமதிப் பத்திரங்களுடன் இணைந்துள்ள நிபந்தனைகள்.

17. பணிப்பாளர், இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்துடன், கரையோர வலய முகாமைச் செய்திட்டத்தை, அல்லது கரையோரம் பேணலுக்கான ஏதேனும் வேலைத்திட்டத்தைக் கருத்திற் கொண்டு கரையோர வலயத்தின் தகுந்த முகாமைக்கு அவசியமெனத் தாம் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளையும் இணைக்கலாம்.

அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடிக் காலமும் அவற்றைப் புதுப்பித்தலும்.

18. (1) பதினொன்காம் பிரிவின்கீழ் வழங்கப்படும் ஓர் அனுமதிப்பத்திரம், பணிப்பாளர் அதில் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருப்பவர், அத்தகைய அனுமதிப்பத்திரம் முடிவடையும் தேதிக்கு முன்னர் ஒரு மாதத்துக்குக் குறையாமல், அத்தகைய அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்கலாம். ஓர் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான ஒரு விண்ணப்பம் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதோடு, விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருப்பவர், அந்த அனுமதிப்பத்திரத்தை வேறோர் ஆளுக்குக் கைமாற்ற விரும்புமிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர், அத்தகைய கைமாற்றத்தைச் செய்வதற்கான அனுமதிக்காகப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கலாமென்பதுடன், பணிப்பாளர், விதித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்படுவதற்கமைய, அத்தகைய கைமாற்றத்தைக் கட்டளைமூலம் அனுமதிக்கலாம்.

அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகளை வேறுபடுத்துதல்.

19. பதினொன்காம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகளைப் பின்வரும் சந்தர்ப்பங்களில் வேறுபடுத்தி அல்லது அனுமதிப்பத்திரத்தை இல்லாதொழித்து பணிப்பாளர் கட்டளையொன்றை ஆக்கலாம் :—

(அ) அத்தகைய அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகளுள் எவற்றையேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் மீறியுள்ளார் என அவர் திருப்திப்படின் ; அல்லது

(ஆ) கரையோர வலயத்தின் தகுந்த முகாமைக்கு அத்தகைய வேறுபடுத்தல் அல்லது இல்லாதொழித்தல் அவசியமானது அல்லது உசிதமானது என அவர் திருப்திப்படின்.

14 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகளை வேறுபடுத்தி அல்லது அத்தகைய அனுமதிப் பத்திரத்தை இல்லாதொழித்துப் பணிப்பாளரினல் ஆக்கப்பட்ட கட்டளை, அதற்கான ஏதுக்களைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், பணிப்பாளர், அத்தகைய கட்டளையின் பிரதியொன்றை அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரிடம் சேர்ப்பிக்கச் செய்தலும் வேண்டும்.

கரையோரம் பேணலுக்கான வேலைத்திட்டங்களை நிறைவேற்றுதல்.

20. (1) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரால் வேலைத்திட்டமொன்று நிறைவேற்றப்படவேண்டுமென்று 14 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள ஏதேனும் நிபந்தனை தேவைப் படுத்துமிடத்தும், அத்துடன் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அத்தகைய வேலைத்திட்டத்தை நிறைவேற்றத் தவறுமிடத்தும், பணிப்பாளர், எழுத்திலான ஓர் அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் அத்தகைய வேலைத்திட்டத்தை நிறைவேற்றுமாறு அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தல் ஒன்று வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அத்தகைய அறிவித்தலில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றத் தவறுமிடத்து, பணிப்பாளர் காரணம் காட்டுவதற்கான வாய்ப்பொன்றை அவ்வாளுக்கு வழங்கியபின் அத்தகைய வேலைத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்பதோடு, அதற்கான செலவை அத்தகைய ஆளிடமிருந்து அறவிடுவதற்கு உரித்துடையாதலும் வேண்டும்.

மேன்முறையீடுகள்.

21. பதினான்காம் பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றை வழங்க மறுத்து பணிப்பாளர் ஆக்கும் ஒரு கட்டளையினல், அல்லது அத்தகைய ஏதேனும் அனுமதிப்பத்திரத்தைக் கைமாற்றுவதற்கு அனுமதி வழங்க மறுத்து 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் ஆக்கும் ஒரு கட்டளையினல், அல்லது அத்தகைய ஏதேனும் அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகளை வேறுபடுத்தி அல்லது அத்தகைய ஏதேனும் அனுமதிப்பத்திரத்தை இல்லாதொழித்து 19 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் ஆக்கும் ஒரு கட்டளையினல் அல்லது 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் சுமத்தும் தேவைப்பாடொன்றினல் இன்னலுறும் எவரேனும் ஆள், விடயத்திற்கேற்றவாறு அத்தகைய தேவைப்பாட்டைச் சுமத்தும் அறிவித்தலின் தேதியிலிருந்து அல்லது அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அதற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

22. வாரியெடுக்கப்பட்ட சேறு, பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட கழிவிடப்பரப்புகளில் போடப்படுமாயின், இப்போதுள்ள கடலோட்டு வாய்க்கால்களின் பேணுகைக்கு, அல்லது அதில் செய்யப்படும் சேறுவாரு கைக்கு 14 ஆம் பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெறவேண்டு மென ஆளொருவரைத் தேவைப்படுத்துவதாக இச்சட்டத்தின் இந்தப் பாகத்திலுள்ள எதுவும் வாசித்துப் பொருள்கொள்ளப்படுதலாகாது. இப்பாகத்தின் ஏற்பாடுகள், இப்போதுள்ள கடலோட்டு வாய்க்கால் களின் பேணு கைக்கு அல்லது சேறு வாரு கைக்கு ஏற்புடை யனவாகாதென் பது.

## பாகம் IV

### பொது

23. (1) பதின்நான்காம் பிரிவில் எது எப்படியிருப்பினும், நியமித்த தேதியில் வலுவிலிருக்கும் சட்டத்திற்கிணங்கச் சட்டமுறையானதாக விருக்கும் ஒரு செயற்பாடாகவுள்ள ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட் டில் அத்தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கரையோர வலயத்தினுள் ஈடுபட்டிருக்கும் எவரேனும் ஆள், நியமித்த தேதியிலிருந்து இருபது நாட்களுக்குள் அச்செயற்பாடு தொடர்பாக 14 ஆம் பிரிவின்கீழ் அனு மதிப்பத்திரமொன்றிற்கான விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து, அவ் விண்ணப்பம் தீர்மானிக்கப்படும்வரை அச்செயற்பாட்டில் ஈடுபடுவது அத்தகைய ஆளுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். இடைக்கால ஏற்பாடுகள்.

(2) பதின்நான்காம் பிரிவின்கீழான அனுமதிப்பத்திரம் ஒன்றிற்காக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் ஒருவரால் செய்யப்பட்ட விண்ணப்பம் பணிப்பாளரால் மறுக்கப்பட்டிருப்பதோடு, அத்தகைய மறுப்பின் விளைவாக, அத்தகைய ஆள், எந்த அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பில் அவ்விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்த அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட ஏவை யேனும் சாதனங்களை அல்லது பொருத்திகளைக் கைவிடும்படி கட்டாயப் படுத்தப்படுமிடத்து, அத்தகைய ஆள், அவ்விதம் கைவிடப்பட்ட சாத னங்களுக்காக அல்லது பொருத்திகளுக்காக நியாயமான நட்டஈடு பெறுவ தற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

24. (1) பணிப்பாளர், அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட எவரேனும் அலுவலர், செய்திட்டத்தைக் கருத்திற்கொண்டு அவர் விதிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, கரையோர வல யத்தினுள் உள்ள கரைமுனங்கின் ஏதேனும் பாகத்தில் அல்லது கடற் படுக்கையில் ஓராண்டிற்கு மேற்படாத ஏதேனும் காலத்துக்கு இருப் பாட்சிகொள்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கலாம். கரை முனங்கில் அல்லது கடற் படுக்கையில் இருப்பாட்சி கொள்வதற் கான அனுமதிப் பத்திரங்கள்.

(2) பணிப்பாளர், அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்த கைய விசாரணையின் பின்னர், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அத்த கைய அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகளுள் எவற்றை யும் மீறியுள்ளாரெனத் திருப்திப்படுவாராயின் ஏதேனும் அனுமதிப்பத்தி ரத்தை இல்லாதாக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றை வழங்க மறுத்து, அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றை இல்லாதாக்கிப் பணிப்பாளரினால், அல்லது பணிப்பாளரினால் எழுத்தில்

அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றினால் இன்னலுறும் எவரேனும் ஆள், கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அதற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

கழிவுப் பொருட்கள் அல்லது உகப்பிலாப் பொருட்கள் கரையோர வலயத்தினுள் அத்துமீறுவதைத் தடுப்பதற்குப் பணிப்பாளர் பணிப்புக்கள் விடுத்தல்.

25. (1) கரையோர வலயத்திலுள்ள நீரின் தரம், அல்லது கரையோர வலயத்தின் உறுதிப்பாடு, ஏதேனும் கழிவுப்பொருளினால் அல்லது உகப்பிலாப் பொருளினால் அல்லது பௌதிக செயற்பாட்டினால் பங்கமான முறையில் பாதிக்கப்படுகின்றது எனப் பணிப்பாளர் காணுமிடத்து, அவர்—

(அ) அத்தகைய கழிவுப்பொருளின் அல்லது உகப்பிலாப் பொருளின் மூலமானது கரையோர வலயத்தினுள் இருப்பின், அல்லது அத்தகைய செயற்பாடு கரையோர வலயத்தினுள் இருப்பின், எழுத்திலான ஓர் அறிவித்தலின் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய செவ்வையாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அல்லது அத்தகைய செயற்பாட்டை தவிர்க்குமாறு அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய கழிவுப்பொருளின் அல்லது உகப்பிலாப் பொருளின் மூலமானது அல்லது அத்தகைய செயற்பாடானது கரையோர வலயத்தினுள் இல்லாதிருப்பின், அத்தகைய அத்துமீறலை அல்லது செயற்பாட்டைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தோதான உள்ளூரதிகார சபைக்கு அல்லது முகவராண்மைக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தோதான எந்தவோர் உள்ளூரதிகாரசபைக்கு அல்லது முகவராண்மைக்குப் பணிப்பாளரால் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றதோ, அந்த உள்ளூரதிகாரசபை அல்லது முகவராண்மை அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுவதற்காக அதன் தத்துவத்திற்குட்பட்ட எல்லா நடபடிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். ஓர் உள்ளூரதிகாரசபை அத்தகைய ஏதேனும் வேண்டுகோளுக்கு இணங்கியொழுக இயலாதிருக்குமாயின் அது அவ்விதமே பணிப்பாளருக்கு அறிவிக்கலாம் என்பதுடன், அத்தகைய அறிவித்தலின் பேரில் பணிப்பாளர் அத்தகைய அத்துமீறலை அல்லது செயற்பாட்டைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் வேண்டும்.

உட்பிரவேசிப்பதற்கான தத்துவங்கள்.

26. கரையோர வலயத்தினுள் உள்ள ஏதேனும் காணியினுள் நியாயமான ஏதேனும் நேரத்தில் பிரவேசிப்பதும், அத்துடன் ஏதேனும் வேலைத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்கு, அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகள் இணங்கியொழுகப்படுகின்றனவா அல்லது இணங்கியொழுகப்பட்டுள்ளனவா என்பதனை ஆய்ந்தறியும் நோக்கத்திற்கு, அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு அல்லது ஏதேனும் பணி

யைப் புரிவதற்கு தொடக்கநிலையிலான அல்லது இடைநேர்விளைவான ஏதேனும் அளவையை, பரிசோதனையை அல்லது புலனாய்வைச் செய்யும் நோக்கத்திற்கு நியாயமான முறையில் அவசியமாகக்கூடியவாறான அத் தகைய செயல்களைப் புரிவதும் பணிப்பாளருக்கு அல்லது அவரால் பொது வாக அல்லது சிறப்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

விபரத் திரட்டுக்கள்.

27. இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழ் கரையோர வலயத்தினுள் ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஆள் எவரையும், விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய விபரத்திரட்டுக்களையும் தகவலையும் தமக்குக் கொடுத்துதவும்படி பணிப்பாளர், எழுத்திலான ஓர் அறிவித்தல் மூலம், தேவைப்படுத்தலாம் என்பதோடு, அத்தகைய அறிவித்தலின் தேவைப் பாடுகளுக்கு இணங்கியொழுகுவது அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும்.

14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுதல் இச்சட்டத்தின் கீழ் ஒரு தவறாதல்.

28. (1) பதினான்காம் பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற வரான ஆள் எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும் என்பதோடு, நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், முதலாவது தவறின் விடயத்தில் ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையா யிரம் ரூபாவுக்கு மேற்படாததுமானதொரு குற்றப்பணத்துக்கு, அல்லது ஓராண்டிற்கு மேற்படாத ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான தவறின் விடயத்தில், ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமானதொரு குற் றப்பணத்துக்கு, அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத் துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்த கைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஆளெவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்பேரில், அத்தவறைப் புரிவதில் அல்லது அத்தவ றைப் புரிதல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கலம், மரக் கலம், படகு, வாகனம், சாதனம் அல்லது எந்திரத்தொகுதி என்பன, அத்தகைய கலத்தில், மரக்கலத்தில், படகில் அல்லது வாகனத்தில் காணப் படும் ஏதேனும் பொருளுடன் சேர்த்து அல்லது பதார்த்தத்துடன் சேர்ந்து பறிமுதலாக்கப்படவேண்டும் என வெளிப்படுத்தி, நீதிவான் கட் டளை ஆக்கலாம். அத்தகைய கட்டளையின்பேரில், கட்டளையில் குறிப்பீடு செய்யப்படும் ஆதனம் முழுமையாக அரசுக்கு உரித்தாதல் வேண்டும். அத்தகைய உரித்தாதல்—

(அ) பறிமுதற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று எந்தக் காலப்பகுதிக்குள் தாக்கல் செய்யப்படக்கூடுமோ அந்தக் காலப்பகுதி முடிவுற்றபின்னர்; அல்லது

(ஆ) பறிமுதற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளவிடத்து, பறிமுதற் கட்டளையை உறுதிப்படுத்தும் அல்லது நிலைநாட்டும் மேன்முறையீட்டுத் தீர்மானத்தின்மீது,

பயனுறுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் கலம், மரக்கலம், படகு, வாகனம், சாதனம், எந்திரத்தொகுதி, பொருள் அல்லது பதார்த்தம், தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் அல்லாத வேறோர் ஆளுக்குச் சொந்தமானது என்பது எண்பிக்கப்படுவதோடு, அது அத்தவறைப் புரிவதில் அல்லது அத்தவறைப் புரிதல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்படும் என அந்த வேறு ஆளுக்குத் தெரிந்திருக்கவில்லையென அந்த வேறு ஆள் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துவாராயின், நீதிமன்றமானது அத்தகைய கலத்தை, மரக்கலத்தை, படகை, வாகனத்தை, சாதனத்தை, எந்திரத் தொகுதியை, பொருளை அல்லது பதார்த்தத்தை விடுவித்துக் கட்டளையை ஆக்கலாம்.

தவறுகள்.

29. (அ) இருபத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் பணிப்பாளரால் அனுப்பப்படும் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் ;

(ஆ) பணிப்பாளருக்கு அல்லது எவரேனும் அலுவலருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதில் பணிப்பாளரை அல்லது அத்தகைய அலுவலரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டை இடுகின்ற எவரேனும் ஆள் ;

(இ) இருபத்தேழாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் ;

(ஈ) இருபத்தேழாம் பிரிவின்கீழ் பணிப்பாளரால் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதில் தம்மால் கொடுத்துதவப்படும் ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவலில் தமது அறிவுக்கெட்டியவரை பொய்யானதாகவுள்ள அல்லது பிழையானதாகவுள்ள ஏதேனும் கூற்றை அளிக்கின்ற எவரேனும் ஆள்,

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு, அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*மேலதிகக் குற்றப்பணம்.*

30. (1) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஒவ்வொருவரும், 28 ஆம், 29 ஆம் பிரிவுகளில் விதித்துரைக்கப்பட்ட குற்றப்பணங்களுடன் சேர்த்து மேலதிகமாக, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படுகின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டமானது, தகவலளிப்போர் வெகுமதிக் கட்டளைச்சட்டத்திற்கான அட்டவணையில் எண்ணிட்டுக் காண்பிக்கப்பட்டதான ஒரு சட்டவாக்கமாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்புக்கள் முதலியவற்றைத் தரைமட்டமாக்கல்.*

31. (1) ஆளெவரும், நியமித்த தேதியிலிருந்து, கரையோர வலயத்தின் ஏதேனும் பாகத்தில் அங்கிகரிக்கப்படாத ஏதேனும் கட்டமைப்பை, வீட்டை, குடிசையை, கொட்டிலை அல்லது வேறு கட்டிடத்தை நிறுவுதலோ நிர்மாணித்தலோ ஆகாது.

(2) பணிப்பாளர், அத்தகைய கட்டமைப்பின், வீட்டின், குடிசையின், கொட்டிலின் அல்லது வேறு கட்டிடத்தின் துலாம்பரமான ஏதேனும் இடத்தில் அறிவித்தலொன்றை ஒட்டிவிடுவதன்மூலம், விடயத்திற்கேற்றவாறு சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அறிவித்தல் கொடுப்பதன்மூலமாக, அத்தகைய அங்கீகரிக்கப்படாத கட்டமைப்பை, வீட்டை, குடிசையை, கொட்டிலை, அல்லது வேறு கட்டிடத்தை அத்தகைய அறிவித்தலில் பணிப்பாளர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் தகர்த்திவிட்டு அகற்றிவிடுமாறு பணிப்பாளர் அத்தகைய சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சியாளரைப் பணிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளரால் ஆக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையால் இன்னலுறும் ஆளெவரும், அறிவித்தல் ஒட்டப்பட்டதிலிருந்து மூன்று நாட்களுள் கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அதற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

(4) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அல்லது மேன்முறையீட்டை நிராகரிக்கும்பொழுது செயலாளரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய ஏதேனும் கட்டமைப்பு, வீடு, குடிசை, கொட்டில் அல்லது வேறு கட்டிடம் தகர்க்கப்பட்டு அகற்றிவிடப்படாதவிடத்து, பணிப்பாளர் அக்கட்டமைப்பை, வீட்டை, குடிசையை, கொட்டிலை அல்லது வேறு கட்டிடத்தைத் தகர்ப்பித்து அகற்றுவிக்கலாம் என்பதுடன், அவ்வாறு செய்வதில் பணிப்பாளரினால் உறப்பட்ட செலவினங்கள், அரசுக்குரிய கடனொன்று என்றுற்போன்று சொந்தக்காரரிடமிருந்து அல்லது இருப்பாட்சியாளரிடமிருந்து அறவிடப்படுதலும் வேண்டும்.

*ஒழுங்குவிதிகள்.*

32. (1) இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்தக் கருமம் தொடர்பில், அல்லது இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமம் விதித்துரைக்கப்படல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கருமம் தொடர்பில், அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியில் அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாக, அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அங்கீகாரம் மறுக்கப் பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற் கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும். ஏதே னும் ஒழுங்குவிதி எத்தேதியில் அவ்வாறு ஒழிக்கப்பட்டதாகக் கருதப் படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பேணல்கள்.

33. (1) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 62 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க அதிபர் ஒருவரினால் அல்லது விதித்துரைக்கப்பட்ட அலு வலரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றும் இச்சட்டத் தின் 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் அனு மதிப்பத்திரமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 59 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஓர் ஒழுங்குவிதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 63 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரமாகக் கருதப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகள் பற்றிய பேணல்கள்.

34. இச்சட்டத்திலுள்ள எதுவும், கரையோர வலயத்தில் அல்லது கரையோர வலய மண்ணில், அல்லது 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கரையோர வலயங்கள் சட்டத்தின்கீழ் இலங்கையின் ஆள்புலக் கடலென வெளிப்படுத்தப்பட்ட கடற்பரப்பில் அல்லது அவற்றின்மீது குடியரசுக் குள்ள தத்துவங்களை அல்லது உரிமைகளை மதிப்புக்குறைப்பதாக வாசித் தல் பொருள் கொள்ளப்படுதலாகாது.

நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

35. பணிப்பாளரால், எவரேனும் பிரதிப் பணிப்பாளரால், உதவிப் பணிப்பாளரால் அல்லது வேறு அலுவலரினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் நல்லெண் ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்கு அத்தகைய பணிப்பாளருக்கெதிராக, பிரதிப் பணிப் பாளருக்கெதிராக, உதவிப் பணிப்பாளருக்கெதிராக அல்லது வேறு அலு வலருக்கெதிராக வழக்கெதுவும், குற்றவழக்கெதுவும் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதல் ஆகாது.

## பாகம் V

## குறித்த சில எழுத்திலான சட்டங்களைத் திருத்துதலும் திரிபுபடுத்துதலும்

குறித்த சில எழுத்திலான சட்டங்கள், கரையோர வலயத்துக்கு ஏற்புடையனவாதல்.

**36.** (1) எழுத்திலான ஏதேனும் சட்டத்தில்—

(அ) கரையோர வலயம் தொடர்பாக, ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கென எவரேனும் ஆளுக்கு அதிகாரமளிக்கின்ற ஏதேனும் அனுமதிப்பத்திரத்தை அல்லது அதிகாரத்தை வழங்குவதற்கான ; அல்லது

(ஆ) கரையோர வலயம் தொடர்பாக, ஏதேனும் வேலைத் திட்டத்தை வகுத்தமைப்பதற்கான அல்லது நிறைவேற்றுவதற்கான,

ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் அதிகாரசபைக்கு அளிக்கின்ற அல்லது அவர்மீது அல்லது அதன்மீது சுமத்துகின்ற ஏற்பாடு இருக்குமிடத்து, கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனை கலந்தாலோசனையின் பின்னரே அத்தத்துவத்தைப் பிரயோகிக்கும்படி அல்லது அக்கடமையைப் புரியும்படி அந்த ஆளை அல்லது அதிகாரசபையை இயலச்செய்வதாக அல்லது தேவைப்படுத்துவதாக அத்தகைய ஏற்பாடு வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 39, 40, 41, 42 ஆகிய பிரிவுகளினால் செய்யப்படும் திருத்தங்கள், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கம் இல்லாதனவாகவிருத்தல் வேண்டும்.

விடமைப்பு, பட்டினச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்

**37.** விடமைப்பு, பட்டினச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டத்தின் 56 ஆம் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

'(4) கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனை கலந்தாலோசனையின் பின்னர் அன்றி, கரையோர வலயத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் இடப்பரப்புக்கென வகுத்தமைக்கப்பட்ட ஏதேனும் சீர்திருத்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்க அமைச்சருக்குத் தத்துவமளிப்பதாக இப்பிரிவிலுள்ள எதுவும் வாசித்துப் பொருள்கொள்ளப்படல் ஆகாது.

இந்த உட்பிரிவில் "கரையோர வலயம்" என்பது, 1981 ஆம் ஆண்டின், கரையோரம் பேணற் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.'.

நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

38. நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

'(3) அமைச்சரானவர், கரையோர வலயத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் காணிப்பரப்புத் தொடர்பிலான ஏதேனும் ஏற்பாட்டைக் கொண்டுள்ள ஏதேனும் வரைவுத் திட்டத்தை, கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனை கலந்தாலோசனையின் பின்னர் அன்றி, 25 ஆம் பிரிவின்கீழ் அல்லது 28 ஆம் பிரிவின் கீழ் தற்காலிகமாக அங்கீகரித்தல் ஆகாது அல்லது அனுமதித்தல் ஆகாது.

இந்த உட்பிரிவில், "கரையோர வலயம்" என்பது, 1981 ஆம் ஆண்டின் கரையோரம் பேணற் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.'.

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் 7 ஆம், 8 ஆம் பிரிவுகளை நீக்குதல்.

39. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் 7 ஆம், 8 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

1973 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

40. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்துமூன்றும் ஆண்டின் 4 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியில், "வழங்குதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்குதலாகாது ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(ஆ) அந்த உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் :—

"(iv) கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அங்கீகாரமின்றி, 1981 ஆம் ஆண்டின் கரையோரம் பேணற் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளவாறாகக் கரையோர வலயத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் காணியில் சுரங்கமறுப்பதற்கு அல்லது ஏதேனும் கனிப்பொருள் வள ஆய்வில் ஈடுபடுவதற்கு உரிமமொன்றை வழங்குதலாகாது.".

41. மண் பேணற் சட்டத்தின் 11 ஆம் பிரிவை உடனடுத்து, பின் வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதோடு, இது அச்சட்டத்தின் 11அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :— மண் பேணல் சட்டத்தில் 11அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

'ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல்.

11அ. (1) மூன்றும் பிரிவிலுள்ள எதுவும், கரையோர வலயத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் காணிப் பரப்புத் தொடர்பாக அப்பிரிவின்கீழ் ஏதேனும் கட்டளையை ஆக்குவதற்கு அமைச்சருக்குத் தத்துவமளிப்பதாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

(2) கரையோர வலயத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் காணிப்பரப்புத் தொடர்பானதும், இப்பிரிவு வலுவுக்கு வரும் தேதியில் நடைமுறையில் உள்ளதுமான 3 ஆம் பிரிவின்கீழான ஒவ்வொரு கட்டளையும் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஆறும் பிரிவிலுள்ள எதுவும், கரையோர வலயத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் காணி தொடர்பாக அப்பிரிவின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அமைச்சருக்குத் தத்துவமளிப்பதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

(4) ஆறும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், இப்பிரிவு வலுவுக்கு வரும் தேதியில் நடைமுறையில் உள்ளதுமான ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கரையோர வலயத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் காணிக்கு அல்லது காணி தொடர்பாக ஏற்புடையதல்ல எனக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில், "கரையோர வலயம்" என்பது, 1981 ஆம் ஆண்டின், கரையோரம் பேணற் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.'.

42. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி;— பொருள் கோடல்.

"கரையோரம்" என்பது, கடலுக்கு அணித்தாயுள்ளதும் கடல்நீரால் மேவப்படாததுமான காணியின் விளிம்பு எனப் பொருளாகும்;

"கரையோரம் பேணல்" என்பது, கடலரிப்பு ஏற்படாமல் அல்லது கடலால் நிலம் கொள்ளப்படாமல் கரையோரத்தைப் பாதுகாத்துப் பேணிக்காத்தல் எனப் பொருளாகும் என்பதுடன், கரையோர வலயத்தினுள் அபிவிருத்திச் செயற்பாட்டைத் திட்டமிடுதலையும் முகாமைசெய்தலையும் உள்ளடக்கும்;

"கரையோர வலயம்" என்பது, சராசரிக் கடல்மட்ட எல்லைக் கோட்டிலிருந்து நிலம்நோக்கி முந்நூறு மீற்றர் தூரத்தினுள் உள்ள காணிப்பரப்பு எனவும், கடல்மட்ட எல்லைக்கோட்டிலிருந்து கடல்நோக்கி இரண்டு கிலோமீற்றர் தூரத்தினுள் உள்ள கடற்பரப்பு எனவும் பொருளாகும்; அத்துடன் நிரந்தர

மாகவோ பருவக்காலத்திலோ, கடலுடன் இணைந்துள்ள ஆறுகளின், அருவிகளின், கடல்நீரேரிகளின் அல்லது வேறு எவையேனும் நீர்நிலைகளின் விடயத்தில் நிலம்நோக்கிய எல்லைக்கோடானது, இயற்கைப் புகுவழி முனைகளுக்கிடையே வரையப்பட்ட நேரான மூலக்கோட்டிற்குச் செங்குத்தாக அளவிடப்பட்ட இரண்டு கிலோமீற்றர்களைக் கொண்டவொரு வரையறைவரை நிலம் நோக்கிய எல்லை விரிவடைதல் வேண்டும் என்பதுடன், அவ்விதம் கடலுடன் இணைந்துள்ள ஆறுகளின், அருவிகளின், கடல்நீரேரிகளின் அல்லது வேறு எவையேனும் நீர்நிலைகளின் நீரை உள்ளடக்குதலும் வேண்டும்;

"கரையோரக் கோடு" என்பது, நீரின் சமதளம், சராசரிக் கடல்மட்டத்தில் கரையுடன் ஒன்றையொன்று ஊடறுக்கும் கோடு எனப் பொருளாகும்;

"அபிவிருத்திச் செயற்பாடு" என்பது, எந்த விதத்திலும் கரையோர வலயத்தின் பௌதிகவியல் தன்மையை மாற்றக்கூடிய சாத்தியம் கொண்ட ஏதேனும் மனிதச் செயற்பாடு எனப் பொருளாகும் என்பதுடன், கட்டிடங்களையும் கட்டுவேலைகளையும் நிர்மாணித்தல், கழிகால்களிலிருந்து, கலங்களிலிருந்து அல்லது வேறு வழிகளிலிருந்து வரும் கழிவுப்பொருட்களை அல்லது வேறு பொருட்களைப் போடுதல், மணலை, முருகைக்கற்களை, சிற்பிகளை, இயற்கைத் தாவரங்களை, கடற்பாசியை அல்லது வேறு பதார்த்தங்களை எடுத்துச் செல்லுதல், சேறுவாருதலும் நிரப்புதலும், காணி மீட்டல், கனிப்பொருள்களுக்காகச் சுரங்கமறுத்தல் அல்லது துளைத்தல் என்பனவற்றையும் உள்ளடக்கும், ஆனால் கடற்றொழிலை உள்ளடக்காது;

"சூழல் தாக்குகை மதிப்பீடு" என்பது, ஓர் உத்தேச அபிவிருத்திச் செயற்பாட்டின் முன்மதிப்பிட்டுரைக்கப்பட்ட சூழல் விளைவுகளின் எழுத்திலான ஒரு பகுப்பாய்வு எனப் பொருளாகும் என்பதுடன், உத்தேச அபிவிருத்திச் செயற்பாட்டின் தவிர்க்கத்தக்கனவும் தவிர்க்க முடியாதனவுமான பாதகமான சூழல் தாக்கங்களின் விவரணம் ஒன்றையும், கரையோர வலயத்தின் சூழலுக்குக் குறைவான அளவில் கெடுதலேற்படுத்தக்கூடியனவான செயற்பாட்டுக்கான மாற்றும் நடவடிக்கைகளின் விவரணம் ஒன்றையும் அத்தகைய மாற்றும் நடவடிக்கைகள் ஏன் நிராகரிக்கப்பட்டன என்பதற்கான காரணங்களையும், அத்துடன் உத்தேச அபிவிருத்திச் செயற்பாட்டுக்குத் தேவைப்படும் மூலவளங்களின் எவையேனும் மாற்றமுடியாத அல்லது சீர்படுத்தமுடியாத பொறுப்புக்களின் விவரணம் ஒன்றையும் உள்ளடக்கும்;

"கரைமுனங்கு" என்பது, நீரின் சராசரி உச்ச எழுச்சித் தள அளவுக்கும் சராசரி தாழ்ந்த எழுச்சித் தள அளவுக்கும் இடையில் உள்ள கடலின் கடலோரப்பரப்பு எனப் பொருளாகும்;

"காணி" என்பது, கடற்படுக்கையையும் கடற்படுக்கையின் மீதுள்ள அல்லது கடலோரத்தின்மீதுள்ள எதனையும் உள்ளடக்கும்;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஏதேனும் அபிவிருத்திச் சபை, மாநகர சபை, நகர சபை, பட்டின சபை அல்லது கிராமச் சபை எனப் பொருளாகும் என்பதோடு, அத்தகைய ஏதேனும் சபையால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் நேரொத்த அல்லது அவற்றைப் போன்ற தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கவும், புரியவும், நிறைவேற்றவும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்டதான ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்;

"பொருள்" என்பது, கனிப்பொருட்களையும், புற்றரைகளையும், கடற்பாசியையும் அத்துடன் வேறேதேனும் தாவரங்களையும் உள்ளடக்கும்;

"சராசரி உயர்ந்த நீர் எழுச்சித் தள அளவு" என்பது, சராசரிக் கடல் மட்ட எல்லைக்கோட்டிலிருந்து சக 0·6 மீற்றர் எனப் பொருளாகும்;

"சராசரி தாழ்ந்த நீர் எழுச்சித் தள அளவு" என்பது, சராசரிக் கடல்மட்ட எல்லைக்கோட்டிலிருந்து சய 0·6 மீற்றர் எனப் பொருளாகும்;

"வேலைத்திட்டம்" என்பது, கரையோரம் பேணல் தொடர்பில் அல்லது கரையோர வலயம் தொடர்பில், ஏதேனும் நிருமாணம், மாற்றல், அழித்தல், அகழ்தல், மீட்டல், பழுதுபார்த்தல் அல்லது பேணல் வேலை எனப் பொருளாகும் என்பதோடு, கரையோர வலயத்தைக் கடலரிப்பு ஏற்படாமல் அல்லது கடலால் நிலம் கொள்ளப்படாமல் பாதுகாக்கும் நோக்கத்துக்காக அல்லது கரையோர வலயத்தின் அபிவிருத்திக்காக சேறுவாருதலும், துளைத்தலும், ஏதேனும் பொருளை எடுத்துச் செல்லுதல் அல்லது போட்டுவைத்தல் அல்லது தாவரங்களை விதைத்தல் அல்லது நடுதல் என்பனவற்றையும் உள்ளடக்கும்;

"கடல்" என்பது, ஏதேனும் வாய்க்காலின், குடாக்கடலின், விரிகுடாவின், அல்லது கழிமுகத்தின் நீரையும், அல்லது கடல்பெருக்குள்ள நேரத்தில் கடல்நீர் எத்தூரம் வரையில் பாயுமோ அத்தூரம் வரையுள்ள ஏதேனும் ஆற்றின் நீரையும் உள்ளடக்கும்;

"நேர்த் தளக்கோடு" என்பது, இலங்கையின் ஆள்புலக் கடற் பரப்பை வெளிப்படுத்தி 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்டதும், அத்தகைய ஆள்புலக் கடற்பரப்பின் எல்லைகள் எந்தத் தளக்கோட்டிலிருந்து அளக்கப்படுகின்றனவோ அந்தத் தளக்கோடுகளையுள்ளனவுமான தளக் கோடுகள் எனப் பொருளாகும்; அத்துடன்

"ஆள்புலக் கடற்பரப்பு" என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தினால் இலங்கையின் ஆள்புலக் கடற்பரப்பு என வெளிப்படுத்தப்பட்ட கடற்பரப்பு எனப் பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 50; (வெளிநாடு) ரூபா 40; ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.